வளவாழ்வு வைப்புத் திட்டம்

<table>
<tr><th>கணக்கின் தன்மை</th><th>வாடிக்கையாளருக்கான நன்மைகள்</th><th>கட்டணங்களும் பொருத்தமான அறவீடுகளும்</th><th>தகுதி</th><th>முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்</th></tr>
<tr>
<td>வாடிக்கையாளர் வைப்பிலிடும் பணத்திற்கு கவர்ச்சிகரமான வட்டியை வழங்கும் புதிய நிலையான வைப்புத் திட்டம்</td>
<td>• சாதாரண நிலையான வைப்புகளை விட அதிக வட்டி வீதம்
• கிளைக்கு வருகை தந்து வேறொருவரைப் பரிந்துரை செய்யலாம்
• இணைய வங்கி ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளும் வசதி
• கணக்கு விசாரணைக்கு ஸ்மாட் கணக்குப் புத்தக வசதி
• குறுஞ்செய்தி வசதி
• இலத்திரனியற் கூற்றுகள்</td>
<td>• ஆகக்குறைந்த வைப்பு –250,000 ரூபாய்
மூன்றாண்டு வளவாழ்வு வைப்பு
• வட்டி வீதம் – ஆண்டுக்கு 10.00% (வ.உ.வ.வீ 9.14)
• காலம் – 3 ஆண்டுகள்
• வட்டிக் கொடுப்பனவு – முதிர்வின் போது மூலதனமாக்கப்படும்
ஐந்தாண்டு வளவாழ்வு வைப்பு
• காலம் – 5 ஆண்டுகள்
• வட்டி வீதமும் கொடுப்பனவும் – வைப்புத் தொகையைப் பொறுத்து படிநிலை அடிப்படையிலான வட்டி வீதங்கள். இதனால் வாடிக்கையாளர்கள் அதிக வட்டி வீத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
<table>
<tr><th rowspan="2">வைப்பு படிமுறை</th><th colspan="2">மாதாந்த வட்டி</th><th colspan="2">வருடவட்டி</th><th colspan="2">முதிர்வின் போதான வட்டி</th></tr>
<tr><th>பேரளவான வட்டி (ஆண்டு)</th><th>வ.உ.வ</th><th>பேரளவான வட்டி (ஆண்டு)</th><th>வ.உ.வ</th><th>பேரளவான வட்டி (ஆண்டு)</th><th>வ.உ.வ</th></tr>
<tr><td>0.25 – 4.99 மில். ரூ</td><td>8.00%</td><td>8.30 %</td><td>8.50%</td><td>8.50 %</td><td>10.50 %</td><td>8.81%</td></tr>
<tr><td>5 – 9.99 மில். ரூ</td><td>8.25%</td><td>8.57 %</td><td>8.75%</td><td>8.75 %</td><td>10.75 %</td><td>8.98%</td></tr>
</table>
</td>
<td>- 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிப்போர்.
- 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வதியாத புலம்பெயர் தொழிலாளர்கள்.
- இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள தனிநபர் சாராத நிறுவனங்கள்
- வங்கியின் பணியாளர்கள்

- கணக்கைத் திறக்கும் நடைமுறைகள்
- வங்கியின் நிலையான கணக்குத் திறக்கும் விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளித்தல் வேண்டும்.

- இலங்கையில் வதிவோர்
- தேசிய அடையாள அட்டை / தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ள செல்லுபடியான கடவுச்சீட்டு</td>
<td>- இலங்கை ரூபாயில் திறக்கலாம்.
- பகுதியளவில் மீளப்பெற முடியாது. நிலையான வைப்புக்குப் பொருத்தமான தண்ட விதிகளுக்கு அமைய முதிர்வுக்கு முன் கணக்கை மூடலாம்.
- வதிவுள் ளொர் அல்லது வதிவற்றோர் என்ற அதே வகுதிகளின்கீழ் கூட்டுக் கணக்குகளைத் திறக்கலாம்
- வைப்பை அதிகரிக்கும்போது மூல நிலையான வைப்புச் சான்றிதழைக் கையளித்தல் வேண்டும்.
- சான்றிதழ் தொலைந்தால் அறியத்தர வேண்டும்.
- கணக்கைத் திறக்கும் கிளையில் மாத்திரமே கணக்கை மூடவும் முடியும்.</td>
</tr>
</table>

10 மில். ரூ / அதற்கு மேல்	8.50%	8.84 %	9.00%	9.00 %	11.00 %	9.16%	
இணைய கொடுப்பனவு அறிவுறுத்தல்	நடைமுறை/சேமிப்பு கணக்கிற்கு அனுப்பப்படும்				மூலதனமாக்கப்படும் அல்லது ந/சே கணக்கிற்கு அனுப்பப்படும்		

கட்டணத் தொகைகள் பற்றித் தெரிந்து கொள்ள http://www.boc.lk/rates-tariff#general-tariff என்ற இணைப்பிற்குச் செல்லவும்

- **ஏனைய அம்சங்கள்**
- **வைப்புக்கு எதிரான கடன்கள் –** நிலையான வைப்பின் 75 வீதத்தை கடனாகப் பெறலாம்.
  நிபந்தனைகள்
  I. வட்டியும் முதலும் மாதந்தோறும் செலுத்தப்பட வேண்டும்
  II. வட்டி வீதம் – பேரளவான வட்டி வீதத்தைக் காட்டிலும் 3 வீதம் அதிகம்
  III. கடன் காலம் வைப்புக் காலத்தை மீறலாகாது

வரிகள் – வட்டியானது இலங்கை அரசாங்கத்தால் மற்றும்/அல்லது கட்டுப்பாட்டு அதிகாரசபையால் அல்லது வங்கியால் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தப்படும் முற்பண வருமான வரி, பிற வரிகள், அறவீடுகள் (ஏதும் இருந்தால்), சட்டரீதியான வரிகள் என்பவற்றுக்கு உட்பட்டவையாகும்

- தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியும் தற்போது வசிக்கும் முகவரியும் வேறு வேறு எனின் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
- விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் இருந்து கணக்குத் திறக்கப்படும் கிளை தொலை தூரத்தில் அமைந்திருந்தால் அக்கிளையில் கணக்குத் திறப்பதற்கான வலிதான காரணங்கள்.
- **இலங்கையில் வதியாதோர்**
- கடவுச்சீட்டின் முகப்புப் பக்கம்
- தேசிய அடையாள இலக்கம் (உறுதிப்படுத்தப்பட வேண்டும்)
- செல்லுபடியான வீசாவின் பிரதி / வெளிநாட்டு வேலையை எண்பிக்கும் ஆவணம்

- **நிறுவனங்கள்**
- நிறுவனத்தின் வகையைப் பொறுத்து துணை ஆவணங்கள் (பதிவு ஆவணங்கள்,தீர்மானம், உரிமைத்துவ விவரம் போன்றவை)

காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கி அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: **https://www.boc.lk**

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவை பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.